காயல்பட்டணம் வளர்த்த தீன் தமிழும் தீந் தமிழும்

கருத்தரங்கு

மூன்றாவது
அனைத்துலக இஸ்லாமியத் தமிழ்
ஆராய்ச்சி மகாநாடு
காயல்பட்டணம்

1978 ஜனவரி 13, 14, 15.

அல்ஹாஜ், டாக்டர் எம். எம். உவைஸ்
''மர்கஸி'' ஹேனமுல்லை, பாணந்துறை,
இலங்கை.

காயல் பட்டணம் வளர்த்த தீன் தமிழும் தீந் தமிழும்

திருவுறு மெழுத்தி னுட்பஞ் செவ்விய வுரையி னுட்பம்
பொருளிடை பயில்ற நுட்பம் போற்றிய செய்யுள் நுட்பம்
விரிவுறு மணியின் நுட்ப மேவிய நெறியி னுட்பங்
கருதருங் கணித நுட்பங் கண்டவர் வாழு மூரே.

இது காயற் பட்டணத்தை வருணிக்கும் ஒரு பாடல். உண்மையி லேயே காயற்பட்டணத்தில் வாழும் மக்களைப் பாராட்டிப்பாடப்பட் டுள்ள ஒரு பாடல். காயல்பட்டணத்து வாழும் மக்களின் பல்வேறு வகையான நுட்பங்கள் இங்கே வருணிக்கப்பட்டுள்ளன. அவர்கள் கண்டுள்ள வெவ்வேறு விதமான நுட்பங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. என்னென்ன எழுத்துக்கள் எங்கெங்கே வரவேண்டும். அவற்றைக் கொண்டு எவ்வாறு பொருத்தமான சொற்களை உருவாக்கலாம். சொற் களின் பாகுபாடும் அத்தகைய வேறுபட்ட சொற்களில் பொதிந் துள்ள கருத்துக்களை உபயோகித்து எவ்வாறு சொற்களை ஆக்கலாம். அவ்வாறு ஆக்கப்பட்ட சொற்களைக் கொண்டு எல்லோராலும் போற் றப்படக்கூடிய செய்யுட்களை இயற்றலாம். எந்த இடத்துக்குச் எந்தச் சொல் பொருத்தமாயிருக்கும். அவ்வாறு இயற்றப்பட்ட செய்யுட் களிலே எவ்வாறு உசிதமான அணிகளை அமைக்கலாம். அத்தகைய அணிகளைக் கொண்டு செய்யுட்களைச் சிறப்புடையனவாக எவ்வாறு அமைக்கலாம். அத்தகைய செய்யுட்களிலே விவரிக்கப்பட்டுள்ள வழி யினைப் பின்பற்றிப் போதிக்க வேண்டிய முறைகள் எவ்வாறு அமைய வேண்டும். அத்தோடு கணித அறிவு எவ்வாறு இருத்தல் வேண்டும். இத்தகைய பல்வேறு துறைகளின் நுட்ப திட்பங்களை அறிந்து அவற் றில் தேர்ச்சி பெற்றவர்கள் விளங்கும் பட்டணமே காயல் பட்டணம் என்று மேலே குறிப்பிட்ட செய்யுள் விவரிக்கிறது.

காயல் பட்டணத்தில் வாழும் மக்களின் புகழை இவ்வாறு போற்றிப் பாடியுள்ளவர் சேகுனுப்புலவர் என்றும் புலவர் நாயகம் என்றும் புகழ்ப்பெயர்களைக் கொண்டு விளங்கிய செய்கு அப்துல் காதிர் நயினுர் லெப்பை ஆலிம் புலவர் அவர்களேயாவர்.

ஓடா நீர் நிலை காயல் என வழங்கப்படும். காயற்பட்டணம் பழமை மிக்கது. தாமிரவருணி நதியின் முகத்துவாரத்தில் அமைந்துள்ளது. அப்பொழுது அந்நகரம் சிறந்த ஒரு வியாபார நிலையமாகத் திகழ்ந்தது. ஹோர்முஜ், ஏடன், பாரசீக வளைகுடாப் பிரதேசங்கள், சீனம் முதலிய பல இடங்களிலிருந்தும் வியாபார பண்டங்கள் அங்கு வந்து குவிந்த வண்ணமாய் இருந்தன. பல சேதங்களிலிருந்தும் வியாபாரிகள் அங்கு திரள் திரளாக வந்தனர். வரலாற்று ஆசிரியர் வஸ்ஸாப் அவர்கள் தம் கூற்றுக்கு இணங்க மேலே குறிப்பிட்ட நாடுகளிலிருந்தும் இராக், குராசான், உரோமபுரி இன்னும் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் பெறக்கூடிய சிறந்த கண்கவர் பண்டங்கள் காயல் பட்டணத்தில் மலிந்திருந்தன.

மார்க்கோபோலோ என்னும் தேச சஞ்சாரி அன்று கண்ட பழம் பெரும் காயல் இப்பொழுது உள்ள காயல் பட்டணம் தான் என்று கூறுவர். காயற்பட்டணத்துக்கு வடக்கே கடற்கரையோரமாக இரண்டு மூன்று மைல் தூரம் சென்றால் கொத்தளங்களினதும் தூர்ந்துபோன கிணறுகளினதும் புதைபொருள்களைக் காணலாம். உடைந்து போன ஓட்டுத் துண்டுகளும் சீன தேசத்திற் செய்யப்பட்ட பீங்கான் பொருள்களின் துண்டுகளும் பிற நாட்டு நாணயங்களும் ஆங்காங்கே புதைந்து கிடப்பதைக் கண்டுகொள்ள முடியும்.

இஸ்லாம் உலகில் பரவுவதற்கு முன்பிருந்தே அறபு மக்களின் சிறு சிறு தொகையினராக வந்து தென்னிந்தியாவின் கடற்கரைப் பிரதேசங்களில் குடியேறினர். இஸ்லாம் உலகில் பரவத் தலைப்பட்டதும் அத்தகைய முஸ்லிம் குடியேற்றங்கள் படிப்படியாக அதிகரித்தன. எட்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர் அவ்வாறு குடியேறிய முஸ்லிம்களின் எண்ணிக்கை திடீரெனப் பெருகத் தொடங்கியது. அவ்வாறு முஸ்லிம் மக்கள் குடியேறிய தென் இந்திய நகரங்களுள் காயற்பட்டணமே சிறந்து விளங்கியது. அவர்களுள் சிறந்து விளங்கியோர் வணிகர்கள். தெய்வபக்தியும் நல்லொழுக்கமும் மிக்கவர்களும் அவர்களிடையே இருந்தனர்.

காயற்பட்டணம் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ளது. திருநெல்வேலி மாவட்டக் கருப்பொருட் களஞ்சியத்தில் காயல்பட்டணத்தின் வரலாறு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 'ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அறபு நாட்டிலிருந்து முஸ்லிம் மக்கள் தென் இந்தியாவுக்கு வந்தனர். அவர்கள் பாண்டிய மன்னனின் அனுமதியைப் பெற்றனர். பாண்டிய மன்னனிடமிருந்து நான்கு மைல் நீளமும் ஒன்றரை மைல் அகலமும் உள்ள ஓர் இடத்தை அவர்கள் பெற்றனர். அங்கே அவர்கள் குடியேறினர். அப்பொழுது அந்தப்பட்டணம் சோனகப் பட்டணம் என்று வழங்கப்பட்டு வந்தது. பின்னர் ஒரு காலத்தில் அங்கு குடியேறிய மக்கள் வேறு இடங்களை நாடலாயினர். பின்னர் மதுரையில் திருமலை நாயக்கன் அரசு புரிந்து கொண்டிருந்த காலத்தில் காயல் பட்டண மக்கள் அங்கும் இங்கும் சென்று குடியேறி உள்ளனர் என்பதை அறிந்தான். அறிந்து அந்த நகரின் தலைமைக்காரரை அழைத்து கலைந்து போன முஸ்லிம் மக்களை மீண்டும் ஒன்று கூட்டும்படி கட்டளை இட்டான். அவர்களுக்கு அங்கு வாழும்படி பணித்துச் செப்பேடும் வழங்கினான்.

இவற்றை எல்லாம் நன்கு ஆராய்ந்து நூல் வெளியிட்டவர் மர்ஹூம் முகம்மது நயினார் அவர்கள். அவர் பழநியைச் சேர்ந்தவர். சென்னைப்பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றினர். காயல்பட்டணம் பற்றிய முகம்மது நயினார் அவர்களின் சிறந்த ஆராய்ச்சியின் பெறுபேறுகள் 'சீதக்காதி வள்ளல்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளன. 'சீதக்காதி திருமண வாழ்த்தும்' சீதக்காதி நொண்டி நாடகமும்' அந்நூலில் இடம்பெற்றுள்ளன.

அந்தக் காலத்தில் பாண்டிய மன்னர்களுக்குக் குதிரை இன்றியமையாத ஒரு செல்வமாக மாறியது. வெடி மருந்துகள் இல்லாத காலத்தில் போர்களில் வெற்றி பெறுவதற்குக் குதிரைகளை வைத்து அவற்றைப் பயன் படுத்துவது மன்னர்களுக்கு அவசியமாயிற்று. நல்ல இனத்தைச் சேர்ந்த குதிரைகளை அறபு நாட்டிலிருந்தே வரவழைக்க வேண்டி ஏற்பட்டது. அறபு நாட்டுக் குதிரைகள் தலைசிறந்தனவாகப் புகழ்ப்பெற்றிருந்தன. அதற்காகப் பெருமளவு பணத்தைச் செலவழிக்க பாண்டிய மன்னர் முன்வந்தனர். அப்பொழுது குதிரை வாணிகம் முஸ்லிம் வணிகப் பெருமக்களின் ஏகபோக உரிமையாக இருந்தது. இவ்வியாபாரத்தில் அவர்கள் மிக்க நேர்மை உடையவர்களாகவே நடந்து கொண்டனர். இத்தகைய நேர்மையான குதிரை வியாபாரத்தின் காரணமாகவே இந்தோனேசியா போன்ற கீழைத்தேய நாடுகளில் இஸ்லாம் துரிதமாகப் பரவலாயிற்று என்று கூறுவர். பாண்டிய மன்னர்களுடனான குதிரை வியாபாரத்தில் முஸ்லிம்கள் பெரும் அளவு பணம் ஈட்டினர். முஸ்லிம்களின் செல்வாக்கும் பாண்டி நாடு முழுவதிலும் பரவியது. மார்க்கோபோலோ தமிழ் நாட்டுக்கு வந்தபொழுது ஒரு பாண்டிய மன்னன் ஒரு குதிரையின் விலையாக இரண்டாயிரம் ரூபாவைக் கொடுத்து வாங்கினார் எனக் குறிப்பிட்டுள்ளது. சாதாரணமாக பாண்டிய மன்னர் ஒருவர் இரண்டாயிரத்துக்கும் அதிகமான குதிரைகளை வாங்குவார் என்றும் அங்ஙனமே ஏனைய மன்னர்களும் குதிரை வாங்குவது வழக்கம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இரண்டாயிரம் குதிரைகள் வாங்கப்பட்டபோதிலும் வருட இறுதியில் இரு நூறு குதிரைகளே எஞ்சி இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் அக்காலத்தில் குதிரைகளைப் பராமரிக்கவும் அவற்றிற்குத் தேவையான வைத்தியங்களைச் செய்யவும் பாண்டிநாட்டில் ஒருவரும் கிடைக்கவில்லை. அறபு நாட்டிலிருந்து வந்த குதிரைகள் காயற்பட்டணத்திலே இறக்கப்பட்டன என்றும் குறிப்பிட்டுள்ளது.

காயற்பட்டணம் அறபு மொழியில் காஹிரு என அழைக்கப்படுகிறது. எகிப்தின் தலைநகர் கெய்ரோ. அது அறபு மொழியில் காஹிரு என அழைக்கப்படுகிறது. முஸ்லிம் மக்கள் தாம் முதன் முதலில் குடியேறிய இடங்களை தாம் புறப்பட்டு வந்த அறபு நகரங்களின் பெயர்களால் அழைப்பது பொதுவான வழக்காறாக இருந்தது. இதற்கான எடுத்துக்காட்டுகளை இந்தியாவிலும் இலங்கையிலும் காணலாம். இந்த அடிப்படையிலேயே இலங்கையிலுள்ள வேர்விலை பர்பரீன், பர்பலி, என அழைக்கப்படுகிறது. முதன் முதலில் வேர்விலையில் குடியேறிய முஸ்லிம்களின் சோமாலிலாந்தின் செங்கடல் துறைமுகமாக ஒரு காலத்தில் சிறந்து விளங்கி இப்பொழுது உபயோகிக்கப்படாமலிருக்கும் பர்பரீன் என்னும் துறைமுகத்திலிருந்தே வந்திருக்கலாம். அதே போன்று காயல்பட்டணமும் காஹிரு என அழைக்கப்பட்டிருக்க

லாம் என்றும் கூறலாம். இஸ்லாமிய மார்க்க அறிவுக்குக் காஹிரு என்னும் நகர் எவ்வாறு சிறந்து விளங்கியதோ அதே போன்று காஹிரு என வழங்கப்படும் காயற் பட்டணமும் சிறந்து விளங்கியது எனலாம். சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது எனலாம். இஸ்லாம் பற்றிய உயர்ந்த அறிவைப் பெறக்கூடிய இடம் காயற்பட்டணமாகும். எனவே தான் காயல்பட்டணம் கிழக்கு நாட்டின் காஹிரு என அழைக்கப்படலாயிற்று. இதனாலேயே நூறு நாமா ஆசிரியரான அகமது மரைக்காயர் அவர்கள் தமது நூலில் காகிறு நாட்டு வளம் என்ற ஒரு பகுதியைச் சேர்த்துள்ளார். இப்பகுதியில் காயற்பட்டணம் மக்கள் மார்க்க பக்தியிற் சிறந்து விளங்குபவர்கள் என்பதைப் பலபாடல்களில் புகழ்ந்துள்ளார் நூறு நாமா ஆசிரியர். இவர் காயற்பட்டணத்தைச் சேர்ந்த பனீயகுமது மரைக்காயர்ப் புலவரின் புதல்வராவார். இப்பொழுது ஒரு பாடலை மாத்திரம் எடுத்துக் கொள்வோம்.

மஸ்ஜித் என்று வழங்கப்படும் பள்ளிவாசல்களில் மக்கள் அல்லாஹ்வைப் பணிந்து புகழ்வர். தொழும் பொழுது அறபு மொழியைப் பயன் படுத்துவர். ஓதுவர். அவ்வாறு ஓதப்படும் வேத வாக்கியங்களைக் கிளிகள் கேட்டுக்கொண்டிருக்கும். எந்த நேரமும் கேட்டுக் கொண்டிருப்பதால் அவை அவற்றை அவ்வாறே திருப்பக் கூறும் ஆற்றலைப் பெற்றுவிடுகின்றன. அங்ஙனம் கிளிப்பிள்ளைகள் உச்சரிக்கும் வேத வசனங்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்றன நங்கணங்கள். அந் நங்கணங்கள் கூட அவ்வேத வசனங்களை திரும்ப மீட்டுக் கூறும் ஆற்றலைப் பெற்றுவிடுகின்றன. எனவே மனிதர்களும் கிளிகளும் நங்கணங்களும் எப்பொழுதும் வேத வாக்கியங்களை உச்சரித்துக் கொண்டிருப்பதனால் அங்கே எவ்வித முசீபத்தும் தங்கிடாது. வறுமை தலைகாட்டாது. சோம்பல் இருக்காது. எவ்விதமான குறைபாடுகளும் இருக்காது என காகிறு நாட்டு வளத்தின் உள்ள ஒருபாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

பள்ளி தோறினு நம்மிறை யோனைப் பணிந்து மாந்தர்
படித்த நல்வே தத்தைக்
கிள்ளை கேட்டுப் படித்திடு ஞ்சொல்லைக் கேட்டுநங்
கணமே கிளர்ந் தோதிடுந்
தள்ளொணுச் சொல்லி தென்றுமு சீபத்துத் தங்கி டாதகன்
றேவிரைந் தோடிடும்
வள்ள லானஜமால் முஹம்மது வாழுங்
காயல் வகுதைநன் னுடே (6)

இனி காயல் வளர்த்த தீன் தமிழுக்கும் தீந் தமிழுக்கும் வருவோம். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்களை இன்று தீன் தமிழ் இலக்கியங்கள் எனச் சுட்டப்படுகின்றன. தீன் என்றால் மார்க்கம். இச் சொல் இஸ்லாத்தையே சுட்டி நிற்கின்றது. தீனை அடிப்படையாகக் கொண்டு தமிழில் எழுதப்பட்ட இலக்கியங்களையே நாம் இன்று எடுத்துக் கொள்வோம். தீன் தமிழை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை எழுதப்பட்ட எழுத்துக்களை அடிப்படையாக வைத்தே இவ்வாறு பிரிக்கலாம். தமிழ் எழுத்துக்களிலே எழுதப்பட்ட தீன் தமிழ் . மற்றது அறபு எழுத்துக்களிலே எழுதப்பட்ட தீன் தமிழ். இவ்விரண்டு பிரிவுகளும் முழுக்க முழுக்க

இயற்றமிழிலே அடங்கும். இசைத்தமிழிலும் தோன்றிய தீன் தமிழ் இலக்கியங்கள் உள்ளன. அவற்றையே நாம் இங்கு தீந்தமிழ் என்று குறிப்பிட விரும்புகிறோம். உணவு என்னும் பொருளில் வரும் தீன் என்னும் சொல்லை இஸ்லாமிய மார்க்கத்தைக் குறிக்கும் தீன் என்னும் சொல்லிலிருந்து எழுத்துக்களினால் வேறுபடுத்திக் காட்ட முடியாது. அந்த வேறுபாட்டை நாம் எமது உச்சரிப்பிலிருந்தே ஊகித்தறிந்து கொள்ளுதல் வேண்டும். காப்பியங்கள் முதல் பல்வேறு வகையான இலக்கியப் பிரபந்தங்களை உற்பத்தி செய்து தீன் தமிழையும் தீந் தமிழையும் வளர்த்த புலவர் பெருமக்கள் வாழ்ந்த பெரும்பதி காயல் பட்டணம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

முதலில் தீன் தமிழ் காப்பியங்களை இயற்றிய முஸ்லிம் புலவர்களை எடுத்துக் கொள்வோம். காயற் பட்டணத்திலே வாழ்ந்த காப்பிய ஆசிரியர்களுள் காலத்தால் முந்தியவர் பனீ அகுமது மரைக்காயர்ப் புலவர் அவர்களே யாவார். இவர் சுலைமான் லெப்பை யாலீம் என்பவரின் புதல்வர். சுலைமான் லெப்பை ஆலிமோ ஜமாலுத் தீன் என்பவரின் புதல்வர். அறிவால் உயர்ந்தவர். பனீ இசுறயூல் கூட்டத்தைச் சேர்ந்தவர். பாயிரத்திலே பனீ அகுமது மரைக்காயரைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

மறையை யறிந்த மனத்திடை மதித்துப்
பண்புறு நெறிசேர் பனீ யிசுறயீல்
நண்புறு குலத்தி னண்ணிய நலத்தார்
தேங்கமழ் சோலைத் திருநகர் காயலின்
ஓங்கிய வறிவா லுயர்ஜமா லுத்தீன்
கண்மணி சுலைமான் களிப்புற அளித்த
அண்ணல் பேரறிவிற்கு அணியெனத் திகழ்வோர்
தருமமுந் தவமுஞ் சாந்தமுந் தக்கசற்
கருமமும் ஒழுக்கமும கருணையும் உடையோர்
உலகியல் வழுவா உயர்நெறி உடையோர்
அலகினல் யோகத்து அரும்பொருள் கண்டோர்
கூரிய மதியினர் குணங்கொளும் தகவினர்
சீரியர் யார்க்கும் செம்மையே செய்வோர்
இல்லறத்து இருந்தும் இயல்மரை நீர்போல்
சொல்லுறு துறவறத் தொன்மையின் நின்றோர்
வண்பனீ அகுமது மரைக்கா யரென்னும்
ஒண்பெயர் உடைய உயர்மொழிப் புலவர்..........

உமறுப்புலவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்துக் காப்பியம் ஒன்று இயற்ற முனைந்தார் எனினும் அவருடைய காப்பியமான சீறாப்புராணம் நபிகள் பெருமானாரின் வாழ்க்கையை முழுமையாகக் கொண்டதாக அமையவில்லை அக்காப்பியத்தைப் பாடி முடிக்க முன்னமேயே உமறுப்புலவர் அவர்கள் காலஞ்சென்றிருக்க வேண்டும். உமறுப்புலவரின் சீறாப்புராணம் உறணிக் கூட்டத்தார் படலத்தோடு முடிவடைகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையைத் தமிழ்ப் பாடலில் பூரணத்துவம் அடையச் செய்வதையே பனீ அகுமது மரைக்காயர் அவர்கள் தமது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். பனீ அகுமது மரைக்காயரின்

காப்பியத்தில் உள்ள முதல் அட்டை இவ்வாறு அச்சிடப்பட்டுள்ளது. 'இஃது நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சரித்திரமாகிய சீருப்புராணத்தில் மூன்றாவது கிசுறத்துக் காண்டம், உறணிக் கூட்டத்தார் படலத்தின் பின் சரித்திரம் காயற்பட்டணம் பனி அகுமது மரைக்காயரவர்களால் செய்யப்பட்டது.' பனி அகுமது மரைக்காயரின் சீருப்புராணம் குறை நிரப்புப்பகுதி 'சின்ன சீறு' என அழைக்கப்படுகிறது. சின்னசீறாவை இயற்றுவதற்கு ஆசிரியருக்கு உரை வழங்கியவர் செய்கலி லெப்பை ஆலிமாவார். இவர் முகம்மது லெப்பை என்பவரின் புதல்வர். காயற்பட்டணத்தைச் சேர்ந்வதர் இந்நூலை இயற்றுவதற்கு பொருளுதவி புரிந்தவர் லெப்பை நயினர் என்னும் கொடை வள்ளல். இவர் சதக்கத்துள்ளா ஆலிம் அவர்களின் புதல்வியின் புதல்வன். காயற் பட்டணத்தைச் சேர்ந்தவர். இங்கே ஆசிரியர் தமது புரவலரை

போத முறுமெய்ஞ் ஞானச் சதக்கத் துல்லா வாலிம் புதல்வி பாலஞ்
சாதி நாயகன் வகுதையி லப்பை நயினு விதையத் தடத்தில் பூத்த (11)

எனக் குறிப்பிடுகிறார். லெப்பை நயினரின் தகப்பன் அபூபக்கர் லெப்பை என்றும் அவர் தம் தகப்பன் மாமு நயினன் என்றும் மற்றொரு பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னொரு பாடலில் இந்த லெப்பை நயினர் என்பவர் அப்துல் காதிர் நயினர் ஆலிமுக்கும் செய்யிது முகம்மதுக்கும் முன்னோன் என்பதும்குறிப்பிடப்பட்டுள்ளது.

சின்ன சீறுவில 39 படலங்களில் 1829 விருத்தங்கள் இடம் பெற்றுள்ளன. இது இயற்றப்பட்டது ஹிஜ்ரி 1145 (1730-1731) இல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை, யாழ்ப்பாணத்திலே சின்ன சீறு முதன் முதலில் பதிக்கப்பட்டு அச்சியற்றப்பட்டது. இதனை நிறைவேற்றியவர் பக்கீர் முகியித்தீன் என்பவர். இவர் பரியாரி மரைக்காயர் என்று வழங்கப்பட்ட உதுமான் லெப்பை என்பவரின் புதல்வர். இது நிகழ்ந்தது ஹிஜ்றி 1272 இல் துல் கச்சி மாதம். (1856 ஆகஸ்ட் மாதம்—நள வருடம் ஆவணி மாதம்) சேகுனாப் புலவரால் வெளியிடப்பட்ட சீறுப்புராணத்தின் முதல் பதிப்பு 1842 இலும் மகாலிங்க ஐயரால் வெளியிடப்பட்ட தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை முதல் பதிப்பு 1847 இலும் பிரசுரிக்கப்பட்டன. என்பது ஈண்டு நோக்கற் பாலது. சீவக சிந்தாமணியின் முதற் பதிப்பை 1886 இலும் பத்துப்பாட்டின் முதற்பதிப்பை 1889 இலும் உ. வே. சாமிநாதையர் அவர்கள் வெளியிடுவதற்கு முன்னரே சீறுப் புராணத்தின் முதற்பதிப்பும் சின்ன சீறுவின் முதற்பதிப்பும் வெளிவந்துள்ளன என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

பனி அகுமது மரைக்காயர் இயற்கை வருணனைகள் நிறைய உண்டு. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டாவது முறையாக உம்றாச் செய்வதற்கு மக்கா மா நகருக்குப் போனார்கள். நிறைவேற்ற வேண்டிய முறையில் உம்றாவைப் பூர்த்தி செய்து விட்டு மதீன மா நகருக்குத் திரும்பினார்கள். அங்கே ஒரு சோலையை அடைந்தார்கள். அச்சோலையை பனி அகுமது மரைக்காயர் அவர்கள் நயம்பட வருணிக்கிறார். அப் பூஞ்சோலையிலே கிள்ளைகள் நன் மறையை ஓதுகின்றன. அவை மனிதர் ஓதுவதைக் கேட்டு அவற்றைத் திரும்பத் திரும்ப ஓதுகின்றன. கிள்ளைகள் ஓதுவதைக் காரிப்பிள்ளைகள் கேட்டுச்

கொண்டிருக்கின்றன. அக்காரிப்பிள்ளைகளும் அவற்றை மீள மீள உச்சரிக்கின்றன. அவை தமக்குத் தாமே உச்சரிப்பதுடன் நின்று விடவில்லை. அக்காரிப்பிள்ளைகள் மனப்பாடஞ்செய்த அதே விதத்தில் அங்கே உள்ள இளங்குயில்களுக்கு ஓதுகின்றன. அவ்வாறு ஓதுதல் மிக்க இனிமையாக ஒலிக்கின்றது. இனிமையான இசையைக் கேட்டால் மயில்கள் ஆடுகின்றன அல்லவா? அங்கே காரிப்பிள்ளைகள் இளங் குயில்களுக்கு ஓதுவதைக் கேட்டுக்கொண்டிருக்கும் மயில்கள் துள்ளி ஆடுகின்றன. இத்தகைய காட்சி நிறைந்தது அப்பூஞ்சோலை. மலர் மிக்குள்ள அந்தச் சோலையை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடைந்தமையையே புலவர் இவ்வாறு வருணிக்கிறார்:

கிள்ளை நன்மறை கிளத்தலைப் பசியவாய்க் காரிப்
பிள்ளை கேட்டிளங் குயில்களுக்கு ஓத நற்பிரியம்
கொள்ளும் கார்க்கரு வளைவிழிக் கூழைமென் மயில்கள்
துள்ளி யாடும் மலர்செறி சோலை மேவினரால்

(மக்கத்துக்கு இரண்டாவது உம்றச் செயப் போந்த படலம் (18)

தமிழ் இலக்கியப் பரப்பிலே ஒன்றுக்கு மேற்பட்ட காப்பியங்களை இயற்றிய புலவர்களைக் காண்பது அரிதிலும் அரிது. ஆனால் தீன் தமிழ் இலக்கியத்திலே ஒன்றுக்கு மேற்பட்ட காப்பியங்களை இயற்றிய புலவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். காப்பியங்கள் இரண்டை இயற்றித் தீன் தமிழுக்கு அழகு செய்பவர் நாகூர் குலாம் காதிறு நாவலர் அவர்களாவார். மூன்று காப்பியங்களை யாத்துத் தீன் தமிழுக்கு மெருகு அளிப்பவர் மதுரை, மீசல், வண்ணக்களஞ்சியப் புலவர் அவர்களேயாவர். ஆனால் நான்கு பெருங் காப்பியங்களை இயற்றித் தீன் தமிழுக்கும் தமிழ் பேசும் நல்லுலகுக்கும் காயற்பட்டணத்துக்கும் பெருமையைத் தேடித் தந்தவர் புலவர் நாயகம் என்றும் சேகுனாப் புலவர் என்றும் புகழ்ப்பெயரைப் பெற்றுள்ள செய்கு அப்துல் காதிறு நயினார் லெப்பை ஆலிம் புலவர் அவர்களேயாவர். ஓர் இலக்கியத்துக்கு தனிச் சிறப்புடையதாக அமைந்து அதற்குப் பெருமையை அளிப்பது அதன் காப்பியங்களே. அத்தகைய காப்பியங்கள் நான்கினை இயற்றி அக்காப்பியங்கள் பாடப்பட்டுள்ள மொழிக்கு பெருமையை அளித்துள்ள வர் புலவர் நாயகம் ஒருவர் மாத்திரமே என்று பெருமையுடன் கூற லாம். இந்த நான்கு காப்பியங்களிலும் எமது புலவர் அவர்கள் 12,600 திரு விருத்தங்களுக்கு குறையாமல் பாடியுள்ளார் என்றால் அது சிறந்த ஒரு சாதனையாகத்தான் இருத்தல் வேண்டும். இவ்வாறு ஒரே மொழியில் ஒரே புலவர் நான்கு காப்பியங்களைப் பாடியுள்ள மையை வேறு எந்த மொழியிலும் காணமுடியாது. புலவர் நாயகம் அவர்கள் நான்கு வெவ்வேறு பொருள்களிலே தமது நான்கு காப்பி யங்களையும் யாத்துள்ளார். இவ்வாறு ஒரே புலவர் நான்கு வெவ்வேறு பொருள்களில் நான்கு காப்பியங்களை பாடியுள்ள ஒரு மொழியையோ ஒரு நாட்டையோ காணமுடியாது. தமிழ் மொழியில் கூட இத்தகைய சாதனையை நிலை நிறுத்தின ஒருவரைப் பற்றி யாம் இன்னும் அறிய வில்லை. புலவர் நாயகம் அவர்கள் ஏறத்தாழ பத்து ஆண்டுகளிலே நான்கு காப்பியங்களையும் இயற்றி உள்ளார்.

புலவர் நாயகம் இயற்றிய முதற் காப்பியம் குத்பு நாயகம். முகியித்தீன் அப்துல் காதிறு ஜீலானி (றலி) அவர்களைப் பாட்டுடைத்

தலைவராகக் கொண்டது. குத்புநாயகத்தின் அரங்கேற்றம் ஹிஜ்ரி 1227 றம்ளான் மாதம் முதல் வெள்ளிக்கிழமை (1810 ஒக்டோபர் 15) அன்று நிகழ்ந்தது. குப்பத்தம்பி என்பவரின் புதல்வர் முகம்மது மஸ்தான் என்பவரே இதன் புரவலராக விளங்கினார். இவருடைய புகழ் குத்புநாயகத்தில் 13 முறை வருணிக்கப்பட்டுள்ளது. ஒரு விருத்தத்திற் உள்ள கடைசி இரண்டு அடிகளும் புரவலர்,

அழகிய குப்பத் தம்பி யருள்முகம் மதுமஸ் தான்தன்

என வருணிக்கப்பட்டுள்ளார். புலவர் நாயகம் தமது வடமொழிப் புலமையை யாத்திரைப்படலத்தில் காட்டியுள்ளார். யாத்திரைப் படலத்திலே கல்வியின் சிறப்பு விதந்தோதப்பட்டுள்ளது. கல்வி அறிவு இல்லாதவருக்குப் பகுத்தறிவு இல்லை. பகுத்தறிவு இல்லை எனின் அழிவு தான்வரும். இக்கூற்றினை விளக்க வடமொழியில் உள்ள விவேக சிந்தா மணியிலிருந்து ஒரு கருத்தினை எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர். பகுத்தறிவில்லாத ஐந்து பிராணிகளை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அசுணம், யானை, வண்டு, விட்டில், மீன் ஐந்தினையும் குறிப்பிடு கிறார். இவ்வைந்தும் இவற்றின் ஐம்பொறிகளாலும் மாய்ந்துவிடு கின்றன. இசையைக் கேட்டதும் செத்து விடுகிறது அசுணம். அதற்கு காதாலே மரணம் ஏற்படுகிறது. சேற்று நீரிலே அமிழ்ந்தினால் வெளி வர முடியாது யானை இறந்துவிடுகிறது. அதற்கு அழிவு உடலால் வருகிறது. வண்டுக்கு மரணம் ஆசைமிகுதியால் மனத்தால் ஏற்படு கிறது. நெருப்பினால் கவரப்பட்டு விட்டில் பூச்சி மரணத்தை தழுவு கிறது. அதன் அழிவுக்குக் காரணம் அதன் கண்கள். வாயினால் மரணம் ஏற்படுகிறது மீனுக்கு. இரை கவ்வப் போய் மரணத்தை அடைகிறது மச்சம் என்னும் மீன். இவற்றிற்குப் பகுத்தறிவு இருந் தால் இத்தகைய அழிவு இவற்றிற்கு ஏற்படாது. அதே போன்று மனி தன் பகுத்தறிவை இழந்து விட்டால் அவனுக்கும் அதே கதிதான். எனவேதான் நாம் பகுத்தறிவை நன்கு பயன்படுத்த கல்வி கற்க வேண்டும். இக்கருத்துக்களையே குத்பு நாயகத்தில் உள்ள யாத்திரைப் படலத்தில் இடம்பெற்றிருக்கும் ஒரு செய்யுளில் புலவர் நாயகம் இவ்வாறு விளக்குகிறார்.

ஒண்சிறை அசுண மியானை ஒளிர்சிறை அளிப தங்கம்

தண்சிறை மச்சம் காதால் சடத்தினால் மனத்தால் கண்ணால்

உண்சுவை அதனால் இவ்வைந் துடலழி வித்த தென்ன

எண்சிறை கொள்ளார் வார்த்தை இருஞ்சிறை எவர்க்குமே (41)

புலவர் நாயகத்தின் இரண்டாவது காப்பியம் திருக்காரணப் புராணம். நாகூர் ஆண்டகை, மீறான் சாகிபு அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட காப்பியம். சாகுல் கமீது ஆண்டகை அவர் களின் வாழ்க்கையைக் காப்பியமாகக்பாடுவதற்கு அகுமது சாகிபு என்பவர் பொருள் உதவி புரிந்துள்ளார். இவர் அபூபக்கர் சித்தீக் என்பவரின் புதல்வர். இவரைப் பற்றிக் கடவுள் வாழ்த்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நலமுறு நாகை வாழு நாயகர் சரிதைக் [illegible]
[illegible] அருமை சாகிபு உள்ள[illegible]
[illegible] பெற்றின் காவலர் [illegible] ரோடு
[illegible] [illegible] தழுககிட வாழு வாழி (39)

அறபு மொழியிலும் இஸ்லாம் மார்க்க அறிவிலும் புலவர் நாயகம் [illegible] காப்பியங்களில் நிறைய ஆதாரங்களுண்டு. ஒன்றை மாத்திரம் [illegible] எடுத்துக்கொள்வோம். எமது இஸ்லாமிய மார்க்க அறிவு நாம் யார் யார் மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதுடன்தான் ஆரம்பமாகிறது. அல்லாஹ் மீதும் மலாயிகத்துமார் மீதும் வேதங்கள் [illegible] மீதும் [illegible] நாள் மீதும் நன்மையும் தீமையும் [illegible] என்பதன் மீதும் நாம் நம்பிக்கை வைத்[illegible] காக நாம் மனப்பாடம் செய்யவேண்டிய [illegible] சொற்றொடர் உள்ளது. அச்சொற்றொடரை [illegible] மொழிபெயர்த்துத் தூய தமிழில் ஒரு பாடலாக்கித் [illegible] புலவர் நாயகம் அவர்கள். 'ஆமந்து பில்லாஹி வமலா[illegible] [illegible] வருசுலிஹி வல்யவ்மில் ஆகிர் வல்கத்ரி [illegible] மினல்லாஹித் தஆலா' என்பதே அச் சொற்றொடர். [illegible] சொற்றொடரையே புலவர் நாயகம் இவ்வாறு ஒரு பாடலில் [illegible] பாடியுள்ளார். இப்பாடல் ஒரு அறபுச் சொற்றொடரின் [illegible] மொழிபெயர்ப்பாக இருந்த போதிலும் இப்பாடலில் [illegible] சொல்லே இடம்பெற்றுள்ளது. நபி என்பதே அச்சொல். இச்சொல்லைத் தமிழில் மொழிபெயர்க்க முடியாது என்பத[illegible] புலவர் நாயகம் இச் சொல்லை அப்படியே தமது செய்யுளில் ஆண்டுள்ளார். இனி அச்செய்யுளைப் பார்ப்போம்.

நாயகன் ஒருவன் உண்டு நவிபுகழ் இமையோர் உண்டு
[illegible] நால்வே தமுண்டு துலக்கிய நபிமார் உண்டு
[illegible] [illegible] [illegible] இரண்டும் [illegible]
[illegible] [illegible] உள்ளோர் நினைப்பரோ வேறு [illegible].
(மேலை நாகூர் புக்க படலம்: 42)

திருமணிமாலை புலவர் நாயகத்தின் மூன்றாவது காப்பியமாகும். [illegible] (அலை) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது [illegible] தமிழ் காப்பியம். இது திருக்காரணப் புராணம் [illegible] நான்கு ஆண்டுகளின் பின்னர் [illegible] ளது. ஹிஜ்றி 1227 றமழான் மாதம் முதலாம் நாள் புதன் கிழமை (1812 செப்டெம்பர் 9) அன்று அரங்கேற்றப்பட்டது திருக்காரணப் புராணம். திருமணிமாலையோ ஹிஜ்றி 1231 சவ்வால் மாதம் 14ஆம் நாள் திங்கட்கிழமை (1816 செப்டெம்பர் 9) அன்று அரங்கேற்றப் பட்டது. திருமணிமாலையை இயற்றுமாறு புலவர் [illegible] [illegible] வழங்கியவர் ஹபீப் முகம்மது என்னும் [illegible]. இவர் இஸ்மாயீல் [illegible] புதல்வர். [illegible] என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

அகப்பொருட்டுறையில் பாக்களை அமைப்பதிலும் புலவர் நாயகம் அவர்கள் [illegible] தேர்ந்தவர்களாக விளங்கினார்கள். [illegible]

பற்றிய [illegible] இல்லை. [illegible] காப்பியங்களில் களவு, காதல் [illegible] அதனால் புலவர் நாயகம் [illegible] காப்பியங்களில் புகுத்தியுள்ளார். [illegible] அம்மையார் [illegible] காதலர் இருவரும் [illegible] இருந்தார்கள். [illegible] இருந்தார்கள். காதலர் இருவரும் [illegible] இருந்தார்கள். இருவர் [illegible] அவர்கள் [illegible] விருப்பமில்லையாம். [illegible] இல்லையாம். [illegible] இல்லையாம். [illegible] இருந்தார்கள். மலர்களின் [illegible] கொண்டு [illegible] இல்லையாம். மலர்களின் [illegible] மறந்துவிட்டார்கள். நித்திரை [illegible] கொண்டே இருந்தார்கள். [illegible] புலவர் நாயகம் அவர்கள் இவ்வாறு விவரிக்கிறார் ஒரு திருவிருத்தத்தில்.

[illegible] மறந்து பூங்கள்
[illegible] மறந்து பந்து
[illegible] மறந்து கொண்ட
[illegible] உயிரொடும் அயர்ந்தார் பூமான்.
(கடிமணப்படலம்: 10)

இப்பாடலில் புலவர் நாயகம் அவர்கள் இரண்டு சொற்களை [illegible] உள்ளார். ஒன்று வரையர் என்பது, மற்றது பூமான் என்பது. பண்டைய தமிழ் இலக்கியங்களிலே வரைதல், வரைவு [illegible] போன்ற சொற்கள் திருமணம், திருமணம் செய்து கொள்ளுதல் வேண்டுதல் போன்ற கருத்துக்களிலே உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். திருமணம் முடிக்க இருக்கும் காதலனை, கணவனாக வர இருப்பவனைக் குறிப்பதற்காக வரையர் என்னும் சொல்லை இதற்கு முன்னர் வேறு யாரும் உபயோகிக்கவில்லை என்றே கூறலாம். இப்பாடலில் இப்றாகீம் நபி (அலை) அவர்களைக் குறித்தே வரையர் என்னும் சொல்லைப் புலவர் நாயகம் உபயோகித்துள்ளார். அரசன் என்னும் பொருளில் பூமான் என்னும் சொல் சாதாரணமாகப் பயன்படுத்தப்படுவதுண்டு. ஆனால் ஒரு பெண்ணைக் குறிப்பிட பூமான் என்னும் சொல் உபயோகிக்கப்படுவதை அருமையாகும். இப்பாடலில் சாறு அம்மையார் அவர்கள் பூமான் என வருணிக்கப்பட்டுள்ளார். புலவர் நாயகத்தின் உபயோகம் சரியானதே. பூமான் என்னும் சொல்லின் கருத்து இலக்குமி என [illegible] குறிப்பிடுவது ஈண்டு நோக்கற்பாலது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிற்கால வாழ்க்கையையும் ஹஸ்றத் அபூபக்கர் சித்தீக் (றலி) அவர்கள் காலத்திலும் ஹஸ்றத் உமறு கத்தாப் (றலி) அவர்கள் காலத்திலும் சிரியா வெற்றி கொள்ளப்பட்ட வரலாற்றையும் விவரிப்பதைப் பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது புதூஹுஷ்ஷாம் என்னும் காப்பியம். சிரியா வெற்றி கொள்ளல் என்பதே புதூஹுஷ்ஷாம் என்பதன் கருத்தாகும். இது புலவர் நாயகத்தின் நான்காவது காப்பியமாகும். புலவர் நாயகம் இதனைப் புதூஹுஷ்ஷாம் என்கிற புராணம் என்னும் நாற்பயன் மெய் நூல

என்றும் குறிப்பிடுகிறார். இந்நூல் [illegible] புலவர் நாயகத்தின் இலக்கியப் பெரும் படைப்பு (Magnum Opus) [illegible]. இவர் [illegible] இத்துணை [illegible] அறபு மொழியில் இருந்த [illegible] தமிழில் [illegible]. இந்நூலில் [illegible] 6787 திருவிருத்தங்களுடன் இடம்பெற்றுள்ளன. இது முகம்மதிய்யா, சித்திக்கிய்யா, பாரூக்கிய்யா என முப்பெரும் [illegible] பிரிக்கப்பட்டுள்ளன.

புலவர் நாயகம் அவர்களுக்குப் பதுக்குஷ்ஷாம் பாடிப் பொருள் [illegible] என்பவர். இவர் [illegible] [illegible] ஆகியோர் [illegible] மக்கள் [illegible] [illegible] அவர்களின் [illegible]. இவர்கள் [illegible] [illegible]. [illegible] அனைவரையும் வாழ்த்திப் பாடல் [illegible] இறுதிப் பாயிரமாக [illegible] அமைந்துள்ளன. கடைசி [illegible] இத்தகைய வாழ்த்துப் பாடல்களாக [illegible]. இவற்றுள் நான்கு பாடல்கள் கொடை வள்ளல் [illegible] அவர்களையும் அவர்கள் குடும்பத்தவர்களையும் வாழ்த்து [illegible] அமைந்துள்ளன. அச்செய்யுட்களை கண்டு நோக்குவோம்.

[illegible] நலிசு பாஅத்து வேண்டு
[illegible] மனத்தினி லுவந்திந் நூற்குச்
சொல்லைத் [illegible] துரை முகம் மதுசகீது
[illegible] பெறுமே நெல்லார் தழைத்திட வாழி வாழி (82)

[illegible] செல்வம் [illegible] பவள மாநகரில் [illegible]
[illegible] நிருவான் வந்த முகம்மது சகீது வாழ்க்கை
[illegible] மக்கள் [illegible] மக்க களிலுயர் சுற்றம்
[illegible] ஆதியின் அருளும் வாழி (83)

[illegible] செய்னுல் [illegible] நின்முகம் மதுக ளிபா
[illegible] கண்மணி [illegible] இறைமுகம் மதுச கீது
பெருநிதி வாழி வாழ்வின் பெறுபலன் வாழி ஆதி
அருள்தரு மத்து வாழி அணிபுகழ் வாழி வாழி (84)

தலைமயிற் சிறந்த பீரு சாகிபு தவத்தால் வந்த
நிலைமயிற் சிறந்த வண்மை நிதிமுகம் மதுச கீது
நல்லுடை முன்னோர் பின்னோர் நலிதரு மக்கள் சுற்றம்
பலனொடு வாழி வாழி [illegible] வாழி வாழி (85)

இவ்வாறு வாழ்த்து பாடி உள்ளமையால் [illegible] புலவர் நாயகம் அவர்களின் கடைசிக் காப்பியமாக இருத்தல் வேண்டும்.

புலவர் நாயகத்தின் பாடல்களிலே [illegible] அமைந்துள்ளமையைக் காணலாம். சில சமயங்களில் [illegible]

தமிழ் இலக்கியங்களிலே [illegible] புதுமை. அந்தக் காலத்து தமிழ் இலக்கியங்களில் [illegible] பாடல்களில் இடம் பெற்றுள்ள சொற்கள் [illegible] சொற்களை [illegible]. [illegible] சொற் [illegible] தனிப் பண் பாக [illegible]. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் [illegible] வைத்துள்ளார் புலவர் நாயகம் அவர்கள் [illegible] மூதூர் நபி கள் நாயகம் (ஸல்) அவர்களின் [illegible] செய்தியும் காணப் பட்ட [illegible]. [illegible] அந்தக் காட்சியைப் புலவர் [illegible] பொழுது [illegible] சொற்களை [illegible] காட்டுகிறார். சில [illegible] தொடர்ந்து வருவ [illegible]. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் [illegible] இயக்கமின்றி [illegible] உயிர் [illegible] எல்லாம் [illegible] விட்டுச் சென்று விட்டன. ஒருவரும் [illegible]. வீடுகளிலே விளக்குகள் ஏற்றப்படவில்லை. [illegible] தாம் செய்வதென்ன வென்று தெரியாது இருந் தனர். இக்காட்சியையே புலவர் நாயகம் இவ்வாறு சுருக்கச் சொல்லி விளங்க வைக்கிறார்.

பாலினை மறந்த [illegible] பால் முலை மறந்த பிள்ளை
[illegible] மறந்த கல்வி
[illegible] மறந்த பள்ளி
இல்லை மறந்த இல்லம் செய்தொழில் மறந்த மூதூர்

(நபி நாயகம் உபாத்துப்படலம்: 48)

இத்தகைய காட்சிகள் பலவற்றை நயம் மிக்கபாடல்களில் சுருங்கிய சொற்களால் விரிந்த பொருளை விளக்கும் பாணியில் தமது காப்பிய மான புதுகுஷ்ஷாமில் அமைத்துக் காட்டியுள்ளார் காயல்பட்டணத்துக் கவிஞர் பெருமான், செய்கு அப்துல் காதிறு நயினார் லெப்பை ஆலிம் புலவர் அவர்கள். தீன் தமிழ் இலக்கியத்திலே உள்ள காப்பியங்களுள் புலவர் நாயகம் அவர்களின் புதுகுஷ்ஷாம் என்னும் காப்பியத்தைப் பேரிலக்கியமாகக் கருதலாம்.

செய்கு அப்துல் காதிறு நயினார் லெப்பை ஆலிம் புலவர் அவர் கள் காயற்பட்டணத்தைச் சேர்ந்தவர்கள். ஹபீபு முகம்மது லெப்பை அவர்களின் புதல்வர். மாமுப் பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் புதல்வரின் புதல்வர். இரத்தினவணிகத் தொழிலில் ஈடுபட்டிருந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பரம்பரை பரம்பரையாக இரத்தினக்கல் வியாபாரம் செய்து வந்தவர்கள். புலவர் நாயகம் தமது காப்பியங் களில் உள்ள கடவுள் வாழ்த்துக்களில் தமது பெயரைக் குறிப்பிடும் பொழுது தமது மூதாதையரைப் பற்றியும் கூறியுள்ளார். அவர்களைப் பற்றிக் கூறும் பொழுது இரத்தினக் கல் வியாபாரத்துறையில் அவர் களுக்கிருந்த ஆற்றலைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். அவர்களுக்கிருந்த அனுபவத்தைத் தொட்டுக் காட்டுகிறார். இரத்தினக்கல் துறையில் அவர்களுக்கிருந்த பரிச்சயத்தைக் குறிப்பிடுவதில் பெருமை கொள் கிறார். இனி புலவர் நாயகத்தின் காப்பியங்களில் அவர்களின்

[illegible] எவ்வாறு [illegible] என்பதைப் பார்ப்[illegible] புலவர் நாயகத்தின் முதலாவது காப்பியமான குத்புநாயகத்தில்

[illegible] கொண்ட காயல் திருநகர் மணிப ரீட்சைப்
[illegible] கொண்ட மாறைப் பிள்ளையி லெப்பை யாலிப்
[illegible] கொளுங்க பீபு முகம்மது லெப்பை பாலன்
[illegible] கொண்ட வல்லோன் உதவிப் பனுவல் செய்தான் (29)

. . . .
. . . . செய்கப்துல் காதி றென்போன் (30)

[illegible] காப்பியமான திருக்காரணப்புராணத்தில்

[illegible] கமல வாவி செறிவயல் காகி றானில்
[illegible] பரீட்சை மாறைப் பிள்ளை யிலப்பை ஆலிப்
[illegible] யெனுங்க பீபு முகம்மதி லப்பை பாலன்
[illegible] பனுவல் செய்தான் ஆதியின் கருணை தன்னால் (33)

. . . .
. . . . செகப்துல் காதி றென்போன் (34)

என்றும் திருமணிமாலையில்

[illegible] கொண்ட காயல் எழின்மணி பரீட்சை வல்லோர்
[illegible] கொண்ட மாறைப் பிள்ளையி லெப்பை ஆலிம்
[illegible] வளர்க பீபு முகம்மது லெப்பை தோன்றல்
[illegible] யோன் கருணை [illegible] உரைத்தனன் இந்நூல் அன்றே (32)

. . . .
திருமணி மாலை கோத்தான் செய்கப்துல் காதிறு என்போன் (33)

என்றும் [illegible] காப்பியமான [illegible]

ஈதக வயல்சூழ் காயல் திருமணிப்பரீட்சை யாரில்
பேதக நீக்கு மாறைப் பிள்ளை யிலப்[illegible]ப யாலிப்
மாதவ மகக பீபு முகம்மதி லெப்[illegible]ப மான்[illegible]
[illegible] தினிதினி னின்ற புகழுனி தோன்ற லன்றே (37)

. . . .
. . . . செய்கப்துல் காதி றென்போன். (38)

என்றும் [illegible] ஆற்றல் [illegible] காண [illegible].

புலவர் நாயகர் அவர்கள் இந்நான்கு காப்பியங்களோடு [illegible] வில்லை, இன்னும் இன் தமிழ் இலக்கியங்களை இயற்றித் தந்[illegible] [illegible] பலவற்றைத் தன்னிடத்தே கொண்ட 'சித்திர [illegible] பல பா[illegible] திரட்டு' என்னும் [illegible]

[illegible] குறிப்பிடப்பட்டுள்ளனர். காயத் பட்டணம், [illegible] இரத்தின பரீட்சை [illegible] [illegible] நயினார் மரைக்காயர் [illegible] அவர்களின் குமாரர் [illegible] பிள்ளை லெப்பை அவர்களின் குமாரர் [illegible] பிள்ளை லெப்பை [illegible] அவர்களின் குமாரர் [illegible] புலவர் நாயகம் செய்தது. அப் [illegible] புலவர் நாயகத் [illegible] இரத்தினக் கல் [illegible] என்பது தெளி [illegible] குறிப்பிட்டு அந்நூன் [illegible] புலவர் நாயகம் ஹிஜ்றி 1268 [illegible] 27 (1852 செப்டெம்பர் 13) இல் இன் [illegible] அரங்கேற்றம் ஹிஜ்றி [illegible] 10 வெள்ளிக்கிழமை (1821 செப்டெம்பர் 14) இலும் [illegible] ஹிஜ்றி 1277 [illegible] 6 வெள்ளிக்கிழமை (1860 ஆகஸ்ட் 24) இலும் நிகழ்ந்துள்ளன.

[illegible] இயற்றிய மற்றொரு நூல் கோத்திர மாலை. [illegible] பற் [illegible] கோத்திரமாலை புதுகுஷ்ஷாம் [illegible] இயற்றப்பட்டது என்பது புலனாகிறது. [illegible] ஒரு செய்யுளில் [illegible] நாயகம் பற்றியும் [illegible] பற்றியும் குறிப்பிடப் [illegible] இன்னொரு [illegible] புலவர் நாயகம் குறிப்பிடுகிறார். அவ்வடி இவ்வாறு அமைந்துள்ளது:

[illegible] நாயன் குபே

[illegible] (றலி) [illegible] யாதும். [illegible] என்பவர் களே அந்நால்வருமாவர்.

[illegible]

[illegible] பாடலைப் பார்ப்போம்.

[illegible]
வெண்பார்

[illegible] டப்போதிலே. (58)

[illegible] நாயகர் [illegible] நாயகி [illegible] நாடகம் [illegible]

[illegible] 'இரு பத்து எட்டு' [illegible] நாற்பது [illegible] இரண்டால் [illegible] எட்டால் பெருக்கி [illegible] நாற்பது கிடைக்கும். [illegible] நாயகர் [illegible] நாயகி [illegible] 149 [illegible] 1281 (1862) [illegible] பட்டது.

[illegible]

செய்யுள் வருமாறு:

வள்ளல் முறுவல் [illegible]
சொல்லால் உரைத்தாய் செயலால் கொடுப்பாய்

கலம்பக உறுப்புகள் பல. இவைகளுக்கு முறையானவை எனக் கொள்ளப்படுகின்ற உறுப்புக்களைத் தவிர்த்து இக்கலம்பகம் இயற்றப்பட்டுள்ளது. பொதுவாகத் தெய்வங்களைப் பற்றிய கலம்பகங்கள் தெய்வப்பெயரோடு சார்த்திக் கூறப்பெறும். தெய்வங்கள் எழுந்தருளியுள்ள ஊர்ப்பெயர்களோடு சார்த்தி வழங்கப்படுகின்றன. முகம்மது நபி (ஸல்) அவர்களைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்ட கலம்பகம் அவர்களின் பிறந்த நகரமாகிய திருமக்கமா நகரத்தின் பெயரால் மக்காக் கலம்பகம் என அழைக்கப்படுகின்றது. கலம்பக உறுப்புக்களுள் ஒன்றான அம்மானை என்பது மக்காக் கலம்பகத்தில் எவ்வாறு அமைந்திருக்கின்றது என்பதைப் பார்ப்போம். அம்மானை என்பது ஒரு வகை ஆட்டம். [illegible] சேரக் கொண்டு ஒரு வகைப் பாடலையும் அம்மானை என்று வழங்குவர். மூன்று மகளிர் இவ்வம்மானை ஆட்டத்தில் பங்கு பெறுவர். தம்முள் வாதம் செய்து அம்மானை ஆடுவர். மக்காக் கலம்பகத்தில் உள்ள அம்மானைப் பாடலில் ஐந்து அடிகள் உள்ளன. முதலிரண்டு அடிகள் ஒருத்தி கூற்றாகவும் அடுத்த இரண்டு அடியும் மற்றொருத்தி கூற்றாகவும் கடைசி அடி இன்னொருத்தி கூற்றாகவும் இந்த அம்மானைப் பாடலில் அமைந்துள்ளது.

நகரங்களுக்கெல்லாம் அணிகலமாகத் திகழ்வது மக்க மா நகரம். அங்கு வாழ்கின்றவர் முகம்மது நபி (ஸல்) அவர்கள். அவர்கள் எத்தகையவர் தெரியுமா? மிக உயர்ந்த ஆகாயத்தை அழகு செய்யும் முழு நிலா போன்றவர்கள் இவ்வாறு ஒருத்தி கூறுகின்றாள். இதனைக் கேட்டதும் மற்றொருத்தி பெருமானார் (ஸல்) அவர்கள் ஆகாயத்தை அழகு செய்யும் முழு நிலா என்று தானே கூறுகின்றாய். அவ்வாறாயின் மேகம் வந்து மறைத்துவிட்டால் முழு நிலாவின் பளபளப்பு குறைந்து விடுமே என்ன என்று கேட்கிறாள். இன்னொருத்தி இக்கேள்விக்கு விடை தருகிறாள். 'ஆம் நீ சொல்வது உண்மையே' என்று கூறி மறை என்னும் சொல்லுக்கு வேறொரு கருத்துத் தோன்றக் கூறுகின்றாள் 'அந்த மறை தான் எல்லோர்க்கும் நன்மை பயக்க வல்லது' எனக் குறிப்பிடுகிறாள். இரண்டாமவள் மேகம் மறைக்கும் என்று கூற மூன்றாமவள் மறை என்பதற்கு வேதம் என்னும் பொருள் உண்டு என்று கூறி மறை மக்களுக்கு இன்றியமையாததொன்று என வாதாடுகின்றாள். இக்கருத்துக்கள் அடங்கிய மக்காக் கலம்பக அம்மானைப் பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

நாடணிந்த மக்கா நகர்வாழ் முகம்மதர்
மேடணிந்த வான முழுமதிகா ணம்மானை
மேடணிந்த வான முழுமதியே யாமாகில்
மாடணிந்த மேக மறையுமே யம்மானை
மறையன்றோ எல்லார்க்கு மாண்புதரும் அம்மானை. (16)

பள்ளியில் இருந்து நடக்கும் நாடகம் ஒன்று. [illegible] வழங்கப்படும். நாடகம் [illegible] என்றும் நாடக [illegible] என்றும் அழைக்கப்படும் [illegible] நபி (ஸல்) அவர்களின் [illegible]

